# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2160/64 - 2020 පෙබරවාරි මස 01 වැනි සෙනසුරාදා - 2020.02.01

*2160/64 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டம்

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 44(5) ஆம் பிரிவின்படி எனக்குள்ள அதிகாரத்தினைச் செயற்படுத்தி சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் கீழுள்ள விடயங்களின் பின்வரும் செயற்பாடுகளை சுதேச வைத்தியச் சேவைகள் இராஜாங்க அமைச்சருக்குப் பொறுப்பளிப்பதனை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*சட்டத்தரணி பவித்ரா வன்னியாரச்சி (பா. உ.),*
*சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சர்,*
*மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர்.*

*சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு,*
*“சுவசிரிபாய”,*
*இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்தை,*
*கொழும்பு 10,*
*2020, சனவரி 29.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

***சுதேச வைத்தியச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *1. திரிபோசா மற்றும் விசேடமாகப் பாலூட்டும் தாய்மார்களுக்காக போசாக்குடன் கூடிய உணவுகளை வழங்கல் மற்றும் விநியோக நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தல்.* | *1. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோச கம்பனி.* | • *(1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) ஆயுர்வேத சட்டம்.* |
| *2. பாரம்பரிய வைத்திய முறைகளைப் பாதுகாத்தலும் அவற்றை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.* | *2. ஆயுர்வேத திணைக்களம்.* | • *(1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) ஹோமியோபதி சட்டம்.* |
| *3. ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி மருந்துப் பொருட்களின் உற்பத்தி.* | *3. இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனம்.* | |
| *4. ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளுக்கு அவசியமான மருந்து மூலப்பொருட்கள் மற்றும் தயாரித்த மருந்துப் பொருட்களின் இறக்குமதி, விற்பனை விநியோகம்.* | *4. ஆயுர்வேத மருத்துவ மன்றம்.* | |
| *5. ஆயுர்வேத, சித்த, யூனானி ஆகிய சுதேச வைத்தியத் துறைகளை மேம்படுத்துவதற்காக குறித்த வைத்தியசாலைகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மருந்தகங்களை நிறுவுதலும் முகாமை செய்தலும்.* | *5. ஆயுர்வேத கல்லூரியும் மருத்துவமனைச் சபையும்.* | |
| *6. மூலிகைச் செடிகள் மற்றும் பதனிடப்பட்ட ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துப் பொருட்களின் ஏற்றுமதியின் ஒழுங்குறுத்துகை.* | *6. ஆயுர்வேத போதனா மற்றும் ஆராய்ச்சி மருத்துவமனை.* | |
| *7. ஆயுர்வேத மருந்துப் பொருள் தயாரிப்பாளர்களின் ஒழுங்குறுத்துகை.* | *7. ஹோமியோபதி மருத்துவமனை, வெலிசறை.* | |
| *8. மூலிகைச் செடிகள் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் தேசிய மூலிகை வகைகளை ஊக்குவித்தலுக்கான கருத்திட்டங்களை குறித்த நிறுவனங்களுடன் இணைப்பாகம் செய்து நிறைவேற்றுதல்.* | *8. ஹோமியோபதி மருத்துவ மன்றம்.* | |
| | *9. சிறுநீரக நிதியம்.* | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***சுதேச வைத்தியச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *9. ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்போர், ஆயுர்வேத மருத்துவத் தொழில் சார்ந்தோர், ஆயுர்வேத துணை மருத்துவ ஆளணியினரின் பதிவு.* | | |
| *10. ஆயுர்வேத மருத்துவமனைகள், ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மருந்தகங்களையும் தாபித்தலும் நெறிப்படுத்தலும் ஊக்குவித்தலும்.* | | |
| *11. சுதேச மருத்துவச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவ அலுவல்களும் சுதேச மருத்துவ சேவைக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.* | | |
| *12. ஆயுர்வேத தொழில் துறையினருக்காக உயர் கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்.* | | |
| *13. ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவமுறைப் பயன்பாட்டின் அபிவிருத்தியும் ஒழுங்குறுத்துகையும் சுதேச மருத்துவச் சேவைகளை வழங்கும் மருத்துவர்கள் மற்றும் அவர்களது சேவைகளின் வசதிகளை உயர் தரத்துக்குக் கொண்டு செல்லல் மற்றும் ஊக்குவித்தலுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.* | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.